# செவிச்செல்வம்

# "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

## August -2019

## STUDY MATERIAL

## CHAPTER 4 - HOW TO SETUP A COMMUNITY RADIO STATION

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# STEPS TO START A COMMUNITY RADIO

## சமுதாய வானொலி நிலையத்தை துவங்குவதற்கான படிநிலைகள்

**CHAPTER - 4**
**EPISODE - 17**

SRUTHI CRS 90.8 MHz
Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# சமுதாய வானொலியின் நோக்கம்.

- சமுதாய வானொலி என்பது சமுதாயத் தேவைகளை அலசுகின்ற ஒரு அமைப்பு.
- வளர்ந்து வருகின்ற நாடுகளில் இம்மாதிரியான சமுதாய வானொலிகள் தோன்ற ஆரம்பித்தது.
- பெரும்பாலும் வணிக ரீதியான வெகுசன ஊடக ஒலிபரப்பாளர்களால் சமுதாயத் தேவைகள் கவனிக்கப்படுவதில்லை.
- அதனால் தான் சமுக வானொலி நிலையங்கள் இயக்கப்படுகின்றன.
- பொதுவாக இலாபநோக்கம் அற்றவை
- தனிநபர்கள் குழுக்களாகவும் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்காகவும் சமுதாய வானொலி படைக்கப்பட்டிருக்கிறது

# சமுதாய வானொலியின் பயன்கள்

- ஊடகங்கள் நிறைந்த இவ்வுலகில் படைப்பாளர்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் இயங்குவதற்கான வழிமுறையை சமுதாய வானொலி வகுத்துக் கொடுக்கின்றது.

- உலகின் பல பகுதிகளில் சமூகம் சார்ந்த வாகனமாகச் செயல்படுகின்றது.

- தன்னார்வத் துறையில் பணிபுரியும் தன்னார்வலர்கள், சிவில் சமூகத்தின் முகவர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடிமக்களுக்காகத் தொடர்ந்து வேலை செய்வதற்கு பெரும் பங்காற்றுகின்றது.

# சமுதாய வானொலிகள் ஆற்றிவரும் சேவைகள்

- பிரான்சு, அர்ஜென்டினா, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அயர்லாந்து போன்ற பல நாடுகளில் கூடுதலாக சமுதாய வானொலி ஒலிபரப்பப்படுகின்றது.
- பெரும்பாலும் சமூக வானொலி நிலயத்தை கல்வி நிறுவனங்களில் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.
- இச்சமுதாய வானொலி வணிக மற்றும் சமூக நிலையங்கள், புவியியல் சமூகங்கள் மற்றும் ஆர்வமுள்ள சமூகங்களுக்கு கூடுதலாக சேவை செய்கின்றது.
- சட்டப்புர்வமாக வரையறை செய்யப்பட்ட இச்சமூக வானொலி தனித்துவமான ஒலிபரப்புத் துறையாகவும் விளங்குகின்றது.
- சமூக நலன் கருதியும் சமூக குறிக்கோள்களை வரையறை செய்வதிலும் இவ்வானொலி நிலையம் பெரும் பங்காற்றுகின்றது.

# சமுதாய வானொலிகள் பற்றிய ஒரு பார்வை

- பல்வேறு நாடுகளில் சமூக வானொலி வித்தியாசமாக உருவாக்கப்பட்டது.
- ஐக்கிய ராஜ்ஜியம், அயர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, கன்னடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.
- மக்களிடையே காணப்படும் மாறுபட்ட கருத்துக்களும் அங்கு பேசக்கூடிய பேச்சுச் சட்டங்கள் மற்றும் நடைமுறை உண்மைகளும் வேறுபடுத்தப்படுகின்றன.
- சமுதாய வானொலியைத் துவங்குவதற்கு அங்கீகாரம் தேவைப்படுகின்றது.
- இந்தியாவின் பல பகுதிகளில் சமுதாய வானொலிகள் வேகமாக அமைக்கப்பட்டு வருகிறது.

# யாரெல்லாம் சமுதாய வானொலிகளை அமைக்கலாம்

- NGO –க்களும் கிருஷி விக்யான் கேந்த்ராக்களும் சமுதாய வானொலியை நடத்தி வருகிறது.
- இந்திய அரசாங்கம் சமுதாய வானொலிப் பற்றிய புதிய கொள்கையை அறிமுகப்படுத்தியது.
- NGO –க்கள், சொசைட்டிகள், அறிவியல் கேந்திரங்கள், கல்லூரிகள் போன்றவை சமுதாய வானொலிகளை அமைத்துக்கொள்ளலாம்.
- ஆகஸ்ட்டு 2018-ன் விதிமுறைகளின்படி சமுதாய வானொலியைத் துவங்குவதற்கு மாநில நிர்வாகத்திடம் பரிந்துரை பெறுதல் வேண்டும்.

## சமுதாய வானொலி நிலையங்களை இயக்குதலும் அவற்றின் பணிகளும்.

- கல்வி நிலையங்களில் அதிகளவில் சமுதாய வானொலிகள் இயங்கிக்கொண்டிருக்கிறது.
- NGO –க்களும் கிருஷி விக்யான் கேந்திராக்களும் சமுதாய வானொலியை நடத்தி வருகிறது.
- கிருஷி விக்யான் கேந்திரா என்பது பண்ணை அறிவியல் மையம் என்று கூறப்படுகிறது.
- விவசாய விரிவாக்க மையமாகவும் இயங்கி வருகிறது.
- இம்மையங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்துக்கும் விவசாயிகளுக்குமான தொடர்பை ஏற்படுத்தித் தருகின்றன

## யார் சமுதாய வானொலிகளைத் தொடங்குவதற்குரிய படிநிலைகள்

- பல்கலைக்கழகம், கல்லூரி, NGO, பண்ணை அறிவியல் மையம் முதலியவைகள் ஆரம்பித்து ஐந்து வருடமாவது ஆகியிருத்தல் வேண்டும்.

- அந்த பகுதி நிர்வாகத்திற்குட்பட்ட அலுவலகத்தில் பரிந்துரைக்கடிதம் வாங்க வேண்டும்.

- இந்த பரிந்துரை கடிதமே போதுமானது.

- NGOக்கள் சமுதாய வானொலி நிலையம் நிறுவுகின்ற இடங்களில் தீவிரவாத அமைப்புகளோட பாதுகாப்புக்குறைவு இல்லாத படியும் இயற்கைச் சீற்றங்கள் ஏதும் ஏற்படாதவண்ணம் சான்றிதழை கூடுதலாக உள்ளூர் நிர்வாகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

## சமுதாய வானொலி நிலையம் துவங்குவதற்கு பல்வேறு படிநிலைகள.

- சமுதாய வானொலி நிலையம் துவங்குவதற்கு பல்வேறு படிநிலைகள் உள்ளன.
- விண்ணப்பப் படிவத்தை www.mib.gov.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்ய வேண்டும். மார்ச் 2019 விதிமுறைப்படி 2,500 கட்டணம் வரைவோலையாக செலுத்தவேண்டும்.
- எந்த இடத்தில் டவர் வைக்கிறோமோ அந்த இடத்தினுடைய துல்லியமான புவிசார் குறியீட்டை எடுத்துக்கொள்ளவேண்டும்.
- விண்ணப்பமானது மாவட்ட நிர்வாகம் மூலமாக, ஆட்சியரின் பரிந்துரை பெற்று அனுப்பப்பட வேண்டும்.

## சமுதாய வானொலி நிலையம் துவங்குவதற்கு பல்வேறு படிநிலைகள்.

- விண்ணப்பம், பாதுகாப்பு, உள்ளாட்சி, HRD., விவசாயம் WPC Wing தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றால் பரிசீலிக்கப்படும்.
- அதன்பிறகு நேர்காணலுக்கு அழைப்பு விடுக்கப்படும்.
- இவற்றில் திருப்திகரமாக இருந்தால் தகவல் தொடர்பு அமைச்சகம். letter of intent (LOI)அனுப்பும்.
- LOI பெற்றவுடன், 30 நாட்களுக்குள் WPC விற்கு அலைவரிசை ஒதுக்கீடுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## சமுதாய வானொலி நிலையம் துவங்குவதற்கு பல்வேறு படிநிலைகள்.

- இதன்பிறகு WPC துறையில் இருந்து 22,500 ரூபாய் ஆண்டு கட்டணம் கட்டுவதற்கான கடிதம் அனுப்பப்படும்.
- அடுத்து விண்ணப்பதாரர் (SACFA)எனப்படும் அலைவரிசை ஒதுக்கீடு குழுவினுடைய ஒப்புதலுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- (SACFA)ஒப்புதல் கிடைத்தவுடன் விண்ணப்பதாரர், GOPAஎன்று அழைக்கப்படும் ஒப்பந்தத்தை தகவல் ஒலிபரப்புத் துறையுடன் செய்து கொள்வார்.

## சமுதாய வானொலி நிலையம் துவங்குவதற்கு பல்வேறு படிநிலைகள்.

- பின்னர், விண்ணப்பதாரர் டிரான்ஸ்மிட்டர்களை வாங்க ஏற்பாடு செய்கிறார்.
- ஸ்டூடியோவை நிறுவி ஆண்டனா, டிரான்ஸ்மிட்டர்களை பொருத்தியவுடன் WOL எனப்படும் உரிமம் வழங்கப்படுகிறது.
- WOL என்ற உரிமம் கிடைத்தவுடன் ஒலிபரப்பு ஆரம்பிக்கப்படுகிறது.
- GOPA ஒப்பந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் ஒலிபரப்பு துவங்க வேண்டும் என்பது விதியாகும்.